**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | STC 246-2025 |
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | ரங்கராஜ் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Village | : | ஊத்துக்குளி |
| Taluk | : | ஊத்துக்குளி |
| Age | : | 48 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஊத்துக்குளி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி பர்வின்பானு வேறு மாவட்டத்தில் பணி மாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் வழக்கின் விசாரணை விரைந்து முடிக்கும் பொருட்டு வழக்கு கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 11.02.2025 ம் தேதி காலை ஊத்துக்குளி காவல் நிலைய ஆய்வாளர் பர்வின்பானு அவர்களுடன் தலைமை காவலர் HC 659 ரமேஷ் மற்றும் காவலர் 1179 ராம்குமார் என்பவரும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக ஊத்துக்குளி அய்யமுத்தங்காடு, பொன்னுசாமி வீட்டின் முன்பு கண்காணித்துக் கொண்டிருந்தபோது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காலை 10.00 மணிக்கு அய்யமுத்தங்காடு, பொன்னுசாமி வீட்டின் முன்பு கண்காணித்த போது ஒரு நபர் சந்தேகப்படும்படியாக நின்றிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியை கண்டதும் அங்கிருந்து ஓட முயற்சித்த வரை உடன் இருந்த போலீஸ் பார்ட்டியுடன் காவல் ஆய்வாளர் பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் பொன்னுசாமி என்றும் தான் அரசு அனுமதியின்றி மது பாட்டில்களை விற்பதற்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேற்படி எதிரியை அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக மது பாட்டில் விற்பதற்காக வைத்திருந்த

குற்றத்திற்காக காரணம் கூறி அதே இடத்தில் வைத்து 10.10 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்துள்ளார்.

2. பின்னர் எதிரி தானாக எடுத்து ஆஜர் செய்த 180 ML அளவு கொண்ட பிராந்தியுடன் கூடிய EXPRESS பிராந்தி பாட்டில்கள் – 10–ஐ உடன் இருந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் 10.20 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 12.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது ஊத்துக்குளி காவல் நிலைய குற்ற எண்.80/2025 U/s. 4(1) (C) TNP ACT இன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணம்.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் அரசு தரப்பு சான்று ஆவணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் சாட்சிகள் ரமேஷ் மற்றும் ராம்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**படிவம் 91 அரசு தரப்பு சான்றாவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 180 ML அளவு கொண்ட பிராந்தியுடன் கூடிய EXPRESS பிராந்தி பாட்டில்கள் – 10 அ. த. சா. பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் எதிரியை கைது செய்து தக்கப்பிணையில் விடுவித்துள்ளார் இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது U/s. 4(1) (C) TNP Act இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. தமிழ்நாடு அரசின் மது விதிகள் படி ஒரு தனிநபர் பிராந்தி/விஸ்கி 4.5 லிட்டர், பீர் 7.8 லிட்டர் வரை வைத்துக் கொள்ள அனுமதி உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மது வகைகள் அரசு மதுபான கடைகளில் விற்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட மது வகைகள் என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து மதுபானத்தை விற்ற தொகை எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுபானத்தை

வாங்கியதாக தனிநபர் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அதன் காரணமாக எதிரியின் மீது மதுபாட்டிலை விற்பனைக்காக வைத்திருந்தார் என்று சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு முகாந்திரமற்றது என்றால் சரியல்ல.

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக இந்த வழக்கில் பொருட்கள் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரும், புலன்விசாரணை அதிகாரியும் ஒருவராக இருப்பது விதிகளுக்கு முரண்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரக் கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.09 15:55:17 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஊத்துக்குளி.**